மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி
முன்னிலை:திரு.நா.வெங்கடேசன், D.C.B.A.,M.L., PGDCLCF.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கடலாடி.
2023 ம் ஆண்டு ஜூலை திங்கள் 31 ம் நாள் திங்கட்கிழமை

**I.A.No.118/2021**
**in**
**O.S.No.42/2019**

வி.வி.எஸ்.ஏ. சிவஞானபாண்டியன் ...மனுதாரர்/உத்தேச 3 பிரதிவாதி

/எதிர்/

1. ராஜேந்திரன்
2. ராஜாத்தி ...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. கார்த்தியாயின் நாச்சியார்
2. அரண்மனைப்பாண்டியன் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 31.07.2023 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/உத்தேச 3 ம் பிரதிவாதி தரப்பில் திரு.K.ரமேஷ்கண்ணன், M.A.,B.L., திரு.B.பூமுருகன், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை இல்லை என மேல் அழுத்தம் செய்தும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் திரு.S.பெரியசாமி, B.Sc.,B.L., திரு.C.இராஜேந்திரன், B.Sc.,B.L., அவர்களும் ஆஜராகி தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/உத்தேச 3 ம் பிரதிவாதியை வழக்கில் தரப்பினராக சேர்த்து அசல் வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/உத்தேச 3 பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

தாவாச்சொத்து உள்ளிட்ட பல சொத்துக்கள் மனுதாரர் தந்தை

N VENKATESAN Digitally signed by N VENKATESAN
Date: 2023.07.31 17:23:22 +0530

V.V.S.அண்ணாசாமி பாண்டியன் என்ற விஜயரகுநாத கருத்துடைய சேர்வைக்கு பூர்வீக பாத்தியமான சொத்துகள் என்றும், 1ம் பிரதிவாதியின் தாய்க்கு தனது தந்தையுடன் சட்ட விரோதமான பழக்கம் ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் மனுதாரர் தாய் ராஜமணி நாச்சியாருக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துள்ளனர் என்றும், மேற்படி சூழ்நிலையில் மனுதாரர் தகப்பனாரான அண்ணாசாமி பாண்டியன் என்பவருக்கும் மனுதாருக்கும் உரிய சொத்துகளில் பாகம் வேண்டி மனுதாரர் மைனராக இருந்ததால் தாயார், தகப்பனரான அண்ணாசாமி பாண்டியன் உள்ளிட்டோர் மீது மதுரையிலிருந்த இராமநாதபுரம் சார்பு நீதிமன்றம் OS.No.01/1963 என்ற எண்ணில் ஜமீன் சொத்துகள் தொடர்பாக நடந்த பாக வழக்கில் 20.12.1963 ஆம் தேதியில் ஏற்பட்ட தீர்ப்பில் ஜமீன் சொத்துகளில் தனக்கும் சரி பங்கு உள்ளதாக ஏற்பட்ட தீர்ப்பினைத் தொடர்ந்து, தனது தந்தை தொடர்ந்த மேல்முறையீடும் சென்னை உயர்நீதிமன்றத்திலும் ஊர்ஜிதம் செய்யபட்டன என்றும், இந்நிலையில் ஏற்பட்ட மத்தியஸ்தர்கள் முன்னிலையில் ஏற்பட்ட சமாதானத்தில் நீதிமன்ற தீர்ப்புபடி கோர்ட்டுக்கு வெளியே சொத்துகளை மனோராஜியாக மனுதாரரும், அவரது தகப்பனாரும் பிரித்துக்கொள்வது என 19.07.1974 ல் முடிவு செய்யப்பட்டு அவ்வாறு சொத்துகளை வாய்மொழியாக இருவரும் பிரித்து அனுபவித்து வந்துள்ளார் என்றும், மனுதாரருக்கும், அவரது தந்தைக்கும் இடையே கடந்த 8.10.1999 ம் தேதியில் சில சொத்துக்களைப் பொறுத்து பாகப்பத்திரம் எழுதிக் கொண்டதாகவும், மனுதாரருக்கு பாத்தியப்பட்டு தனது அனுபவத்தில் உள்ள பல சொத்துகளை அபகரிக்க வேண்டும் என்றும், பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கின் 1ம் பிரதிவாதி அவரது மகனான 2 ம் பிரதிவாதி மூலம் பல மோசடி ஆவணங்களை உற்பத்தி செய்து பல வழக்குகளை தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் தனது தந்தை கடந்த 10.11.2010 ம் தேதியன்று இறந்து விட்டார் என்றும், மேற்படி தனது தந்தையின் வாரிசாக 1ம் பிரதிவாதியையும் அறிவிக்ககோரி மாவட்ட உரிமையியில் நீதிமன்றம் முதுகுளத்தூரில் தாக்கல் செய்ததில் மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதியும் வாரிசு என்று தீர்ப்பு ஏற்பட்டது என்றும், மேற்படி தீர்ப்பை எதிர்த்து நான் சார்பு நீதிமன்றம் முதுகுளத்தூரில் மேல்முறையீடு செய்ததில், மாவட்ட உரிமையியில் நீதிமன்றம் முதுகுளத்தூர் வழங்கிய தீர்ப்பபை ரத்து செய்து தீர்ப்பளித்துள்ளது என்றும், தாவாச்சொத்து உட்பட மொத்தசொத்தின் புல எண்.192 தனக்கு பாத்தியப்பட்டு, பின் பல

N VENKATESAN Digitally signed by N VENKATESAN
Date: 2023.07.31 17:23:31 +0530

உட்பிரிவுகளாகி பல நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றும் அது போக உட்பிரிவு புலங்களான 192/2, 192/4 க்கு மனுதாரர் பெயரில் பட்டா எண்.1865 என 14.2.1992 ம் தேதி முதல் தாக்கலாகி வருகிறது என்றும், மேலும் மேற்படி சொத்து தற்போது காலியிடமாகவே இருந்து வருகிறது என்றும், மேலும் மேற்படி 192/2 பல உட்பிரிவுகளாக ஆகி தற்போது தாவாச்சொத்து புல எண் 192/14 என தாக்கலாகி வருகிறது என்றும், மேற்படி நிலையில் வாதிகள் தாவாச்சொத்து தனது தந்தையின் மூலம் கிரையம் பெற்று விட்டதாகவும், வழக்கின் பிரதிவாதிகள் வீண் வில்லங்க விபரம் செய்து வருவதால் மேற்படி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வரும் விபரத்தைக் கூறி. அதனால் குறைந்த விலைக்கு யாருக்காவது விற்று விடலாம் என்று வாதிகள் வகையறாவினர் பிரஸ்தாபித்து வந்துள்ளனர் என்றும், அதுகுறித்து நான் தனது வழக்கறிஞர் மூலம் வழக்கு விபரத்தை பார்த்த தெரிந்து கொண்டேன் என்றும் மேலும் வாதிகளும், பிரதிவாதிகளும் வஞ்சகூட்டு கொண்டு தாக்கல் செய்துள்ளதை தவிர வேறொன்றும் இல்லை என்றும், தாவாச்சொத்து உள்ளிட்ட மொத்த சொத்துகளில் எவ்வித உரிமையோ, அனுபவமோ இல்லாத உபய தரப்பினரும் மோசடியாக ஏற்படுத்திய ஆவணங்களைக்கொண்டு அதன் மூலம் வருவாய்துறையில் பட்டா பெற்று உண்மையை மறைத்து வழக்கை நடத்தி வரும் நிலையில் மேற்படி வழக்கில் மனுதாரரை தரப்பினராக சேர்த்து வழக்கை நடத்தினால் நீதிமன்றத்திற்கு உண்மைநிலை தெரியும் வரும் என்பதால், வழக்கில் மனுதாரரை தரப்பினராக சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் மனுவின் சுருக்கம்.</u>

தாவாச் சொத்து சம்பந்தமாக வாதி, பிரதிவாதிகளுக்கிடையே கடந்த 2003ம் வருடம் முதல் வழக்கு நடந்து வருகிறது என்றும், வழக்கு 1வது வாதி இந்த மனுதாரின் தகப்பனாரைப் பெற்ற பாட்டியின் உடன் பிறந்த சகோதரியின் மகன் வழி பேரன் என்றும், அந்த வழியில் 1வது வாதி இந்த மனுதாரரின் சகோதரர் உறவு முறை கொண்டவர் என்றும், தாவா சொத்து சம்மந்தமாக கடந்த 2003ம் வருடம் முதல் வழக்குகள் நடந்து வரும் விபரம் 2003ம் வருடத்தில் இருந்தே இந்த மனுதாரருக்கு

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2023.07.31 17:23:35 +0530

தெரியும் என்றும், தாவா சொத்தைப் பொறுத்து இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகள் முதலில் பரமக்குடி சார்பு நீதிமன்றத்தில் மு.வ.எண்.89/2003 என்ற வழக்கை தாக்கல் செய்தனர் என்றும், உரிமையியல் நீதிமன்றங்களின் பணஆள்வரை வரம்புகள் மாற்றம் செய்யப்பட்டதன் அடிப்படையில், மேற்படி வழக்கு முதுகுளத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றலாகி மு.வ.எண்.89/2004 ஆக நடைபெற்று வந்தது என்றும், மேற்படி வழக்கில் தாவா சொத்தைப் பொறுத்து தனது பெயருக்கு தனது தகப்பனார் 1994ம் வருடத்தில் பதிவு செய்த கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்த விபரத்தைக் குறிப்பிட்டு தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்று தனது எதிர்வழக்குரையைத் தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதே நேரத்தில், தாவா சொத்தை 1999ம் வருடத்தில் தனது தகப்பனாரிடம் இருந்து வாதிகள் கிரையம் வாங்கியுள்ளதாகக் கூறி வழக்கு நடத்தி வருகின்றனர் என்றும், 1994ம் வருடத்தில் தனக்கு கிரையம் கொடுத்த சொத்தைப் பொறுத்த 1999ம் வருடத்தில் வாதிகள் பெயரில் கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்க தனது தகப்பனாருக்கு உரிமை கிடையாது என்றும், மு.வ.எண். 89/2004 வழக்கை இந்த வாதிகள் நடத்தாமல் வெற்றிகரமாக 10 வருடங்கள் இழுத்தடித்தனர் என்றும், கடந்த 2014ம் ஆண்டில் வாதிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை முடிந்து, எனது தரப்பில் நானும் சாட்சியமளித்திருந்தேன் என்றும், இந்நிலையில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மேற்படி வழக்கை வாரங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது என்றும், எங்களது தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக வாய்தா ஏற்பட்ட சமயத்தில், வாதிகள் மேற்படி வழக்குமூலத்தின் அடிப்படையில் புதிய வழக்கு தாக்கல் செய்யும் உரிமையுடன் வழக்கை வாபஸ் பெற்றும் கொள்ள அனுமதிக்கக் கோரி இடைமனு என் 424/2014 என்ற மனுனைத்தாக்கல் செய்தார். மேற்படி இடைமனு கடந்த 03.12.2014ம் தேதியில் அனுமதிக்கப்பட்டது என்றும், அதன்பின் வாதிகள் முதுகுளத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமனறத்தில் மு.வ.எண். 11/2015 என்ற வழக்கை தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்து நடத்தி வந்தனர் என்றும், மேற்படி இடைமனு எண்.424/2014 அனுமதிக்கப்பட்டதை ஆட்சேபித்து நாங்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த C.R.P.(MD) No.248/2015 வழக்கு அனுமதிக்கப்பட்டது என்றும், உயர்நீதிமன்ற

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2023.07.31 17:23:39 +0530

உத்தரவை எதிர்த்து வாதிகள் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த அப்பீல் தாக்கல் செய்ய சிறப்பு அனுமதி கோரும் மனு 17112/2015 அனுமதிக்கப்பட்ட காரணத்தால், மேற்படி மு.வ.எண்.11/2015 வழக்கு தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தது என்றும், இந்நிலையில் புதிதாக கடலாடியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திறக்கப்பட்டதால் ஆள்வரை வரம்பு கருதி சமூகம் நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றம் செய்யப்பட்டு தற்போது மு.வ.எண்.42/2019 ஆக நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்த அசல் வழக்கில் 2வது வாதி 1வது வாதியின் இரண்டாவது மனைவி ஆவார் என்றும், 1வது வாதி கடந்த 15.07.2020ம் தேதியில் இறந்துவிட்டார் என்றும், மேற்படி விபரம் சமூகம் நீதிமன்றத்திற்கு கடந்த 24.11.2020ம் தேதி முதல் வழக்கு வாரிசு சேர்க்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டு வாய்தா போடப்பட்டு வந்தது என்றும், அதன்பின் 4 மாதங்கள் கழித்து கடந்த 19.03.2021ம் தேதியில் வாரிசுகள் சேர்க்கும் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி மனுக்கள் கடந்த 01.04.2021ம் தேதியில் அனுமதிக்கப்பட்டு, பிராதில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டு, 4 மாதங்களுக்கும் மேலாக வாதிகள் தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வந்த நிலையில், வாதிகள் இந்த மனுதாரருடன் கள்ளக்கூட்டு சேர்ந்து கொண்டு மனுதாரர் பெயரில் 3ம் தரப்பினரை சேர்க்கக் கோரும் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனு பத்தி 2ல் தாவா சொத்து உள்ளிட்டு பல சொத்துக்கள் மனுதாரரின் தந்தைக்கு பூர்வீக பாத்தியமான சொத்துக்கள் என்று கூறியிருப்பது தவறாகும் என்றும், தாவா சொத்து மனுதாரரின் தந்தைக்கு பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்து ஆகும் என்றும், மேற்படி பத்தியில் எனது தாயாரைப் பற்றி மிகவும் கீழ்த்தரமான முறையில் மனுதாரர் கூறியுள்ளது விபரங்களை நான் கடுமையான ஆட்சேபிக்கிறேன் என்றும் மேற்படி அவமதிப்பான கருத்துக்களைக் கூறி எனக்கு மிகுந்த மனு வருத்தத்தையும், உளைச்சலையும் ஏற்படுத்திய காரணத்திற்காக மனுதாரர் மீது சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்கும் உரிமையை இதன் மூலம் தக்க வைத்துக்கொள்கிறேன் என்றும், மனு பத்தி 3ல் கூறப்பட்டுள்ள மு.வ எண்.1/1963 வழக்கு பற்றிய விபரங்கள் உண்மையென ஒப்புக் கொள்ளப்படுகிறது என்றும், மேற்படி வழக்கில் சாயல்குடி ஜமீனுக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களில் எனது தகப்பனார் அண்ணாசாமி பாண்டியனுக்கு பாதி சொத்துக்களும், இந்த மனுதாரருக்கு

N VENKATESAN Digitally signed by N VENKATESAN
Date: 2023.07.31 17:23:44 +0530

பாதி சொத்துக்களும் உரிமைப்பட்டதென தீர்மானிக்கப்பட்டது என்றும், அதன்பிறகு மேற்படி சொத்துக்களை கண்டதில் பாதியாக பிரித்துக் கொண்டு, தனது தகப்பனாரும் இந்த மனுதாரரும் அனுபவித்து வந்து, பந்தக பாராதீனங்களும் செய்து வந்தனர் என்றும், மேற்படி பத்தியில் 19.07.1974 ல் வாய்மொழியாக ஒரு சமாதானம் ஏற்பட்டதாகவும், அதில் மனுதாரரின் தகப்பனாரின் ஆயுள் காலத்தில் பந்தக பாராதீனங்கள் செய்தது போக, ஆயுளுக்குப்பின் மிஞ்சக்கூடிய சொத்துக்களை மனுதாரர் அடைந்து கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதும் உண்மைக்குப் புறம்பானவைகளாகும் என்றும், மேற்படி கூற்றை வாதத்திற்காக உண்மை என்று எடுத்துக் கொண்டாலும், தனது தகப்பனார் தாவா சொத்தைப் பொறுத்து தனக்கு 1994 ம் வருடத்தில் கிரையம் எழுதிக் கொடுத்துள்ள நிலையில் இந்த மனுதாரர் தாவாச் சொத்தில் தற்போது எந்த உரிமையும் கோர முடியாது என்றும், மனுதாரர் அபிடவிட் பத்தி 4 ல் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றும் உண்மையில் மனுதாரர் அவரது பாகத்திற்கு கிடைத்த சொத்துக்கள் அனைத்தையும் விற்றுத் தீர்த்துவிட்டு எனது தகப்பனாரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களையும் கபளீகரம் செய்ய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் தனது தகப்பனாரை சாயல்குடியில் நிம்மதியாக வாழவிடாமல் கொடுமைகள் செய்து அவரை அவமரியாதையாக நடத்திவந்தார் என்றும், அதனால் எனது தகப்பனார் வேறு வழியின்றி மதுரையில் குடியேற வேண்டியதாகி விட்டது என்றும், தனது தகப்பனார் உள்ளூரில் இல்லாததைப் பயன்படுத்தி தனது தகப்பனார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் பலவற்றையும் இந்த மனுதாரர் விற்றுத் தீர்த்துவிட்டார் என்றும் அவ்வாறான சில விக்கிரையங்கள் சம்பந்தமாக எங்களது நியாயமான உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவே இந்த மனுதாரருக்கு எதிராக நானும் 2 ம் பிரதிவாதியும் சில வழக்குகளை நடத்தி வருகிறோம் என்றும், மனுதாரர் அபிடவிட் பத்தி 4 ல் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானதாகும் என்றும் மேற்படி பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க மனுதாரர் கடமைப்பட்டுள்ளார் என்றும், மனுதாரர் அபிடவிட் பத்தி 5 ல் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவைகளாகும் என்றும் உண்மையில் மனுதாரர் அவரது பாகத்திற்கு கிடைத்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்ட சொத்துக்களையும் கபளீகரம் செய்ய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் தனது தகப்பனாரை

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2023.07.31 17:23:48 +0530

சாயல்குடியில் நிம்மதியாக வாழவிடாமல் கொடுமைகள் செய்து வரை அவமரியாதையாக நடத்தி வந்தார் என்றும், அதனால் தனது தகப்பனார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் பலவற்றையும் இந்த மனுதாரர் விற்றுத் தீர்த்துவிட்டார் என்றும் அவ்வாறான சில விக்கிரையங்கள் சம்பந்தமாக எங்களது நியாயமான உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவே இந்த மனுதாரருக்கு எதிராக நானும் 2ம் பிரதிவாதியும் சில வழக்குகளை நடத்தி வருகிறோம் என்றும், மனுதாரர் அபிடவிட் பத்தியில் முதுகுளத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கில் மனுதாரர், இந்த மனுதாரரும் மனுதாரரின் தகப்பனார் V.V.S. அண்ணசாமி பாண்டியன் அவர்களின் வாரிசுகள் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டதாக கூறியிருப்பது உண்மை என்று ஒப்புக் கொள்ளப்படுகிறது என்றும், மேற்படி வழக்கில் பல வாய்ப்புகள் அளிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையில், அவர் தரப்பில் வாய்மொழி சாட்சியங்கள் இல்லையென்று மனுதாரரது வழக்கறிஞர் endorsement செய்தபின், வாதுரைகள் கேட்கப்பட்டு, வழக்கு அனுமதிக்கப்பட்டது. ஆனால், சார்பு நீதிமன்றத்தில் மனுதாரர் தாக்கல் செய்த மேல்முறையீட்டில், அசல் வழக்கில் மனுதாரர் சாட்சியத்தை பதிவு செய்ய அனுமதிக்க வேண்டும் என்று மனுதாரர் மன்றாடிய காரணத்தால், மனுதாரரை விசாரித்து, அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்காக மேற்படி வழக்கு விசாரணை நீதிமன்றத்திற்கு மீட்டனுப்பபட்டுள்ளது. மனுதாரர் கடந்த (1) 141977 ம் தேதியில் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் (சாயல்குடி சார்பதிவக ஆவண எண். 441/1977), (2) 21.7.1979 ம் தேதியில் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் (சாயல்குடி சார் பதிவக ஆவண எண். 1163/1979) மற்றும் (3) 25.04.2005 ம் தேதியில் நானும் மனுதாரரும் சேர்ந்து எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் (சாயல்குடி சார் பதிவக ஆவண எண். 258/2005) ஆகிய ஆவணங்களில் மனுதாரர் V.V.S. அண்ணசாமி பாண்டியன் அவர்களின் மகள் என்று குறிப்பிட்டுள்ளார் என்றும், தற்போது நான் காலஞ்சென்ற V.V.S. அண்ணசாமி பாண்டியன் அவர்களின் மகள் இல்லை என்று மனுதாரர் கூறுவது எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்றும், மனுதாரர் அபிடவிட் பத்தி7 ல் புல எண் 192-ல் கண்ட மொத்த சொத்தும் அவருக்கு பாத்தியப்பட்டதாக கூறியிருப்பது இட்டுக்கட்டிய பொய்யாகும். மேற்படி கூற்று மனுதாரர் அபிடவிட் பத்தி-3 ல் அவர் கூறியுள்ள மு.வ.எண். 1/1963- ல்

N VENKATESAN Digitally signed by N VENKATESAN
Date: 2023.07.31 17:23:52 +0530

ஏற்பட்ட தீர்ப்பின்படி, சொத்துக்களை கண்டதில் பாதியாக பிரித்து அனுபவித்து வந்ததற்கு எதிரானதாக உள்ளது. சாயல்குடி கிராம புல எண். 192-50 கட்டுப்பட்டிருந்த சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1264 ஏக்கர் ஆகும். அதில் பாதியான 6.32 ஏக்கரை இந்த மனுதாரர் ஏற்கெனவே விற்றுத் தீர்த்துவிட்டார். ஆகவே, புல எண். 192 சொத்தில் மனுதாரருக்கு தற்போது உரிமையிருப்பதாக கூறுவது தவறாகும். மேலும் புல எண்.192/14 ல் கட்டுப்பட்ட ஒரு ஏக்கருக்கு மனுதாரர் பெயரில் பட்டா இருப்பதாகக் கூறுவது பொய் என்றும், மனுதாரர் அபிடவிட் பத்தி8 ல் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும், தவறானவைகளாகவும், கற்பனையானவைகளாகவும் உள்ளது. நான் ஏற்கெனவே கூறியுள்ளது போல. தாவா சொத்தைப் பொறுத்து கடந்த 2003 ம் வருடம் வழக்கு நடந்து வரும் விபரங்கள் இந்த மனுதாரருக்கு நன்கு தெரிந்திருந்தும், வழக்குச் சொத்தில் எந்த உரிமையும் கொண்டாடிக் கொண்டு கடத்த 19 வருடங்களாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு, தற்போது வழக்குச் சொத்தை வீற்கப்போவதாக வாதி வகையறாவினர் பிரஸ்தாபித்து வருவதாக மனுதாரர் கற்பனையாகக் கூறியுள்ளார். வாதி வகையறாவினர் உண்மையாகவே அவ்வாறு பிரஸ்தாபம் செய்திருந்தால், அந்த பிரஸ்தாபித்தார். என்ற விபரத்தையும் தேதியையும். இடத்தையும், யாரிடம் 'மனுதாரர் அவரது அபிடவிட்டில் தெரிவித்திருப்பார். அசல் வழக்கில் வாதிகள் தோற்றுப் போவது உறுதியாகிவிட்ட காரணத்தால், அசல் வழக்கை நடத்தாமல் இழுத்தடிப்பதன் மூலம் எனக்கும், 2 வது பிரதிவாதிக்கும் வீண்அலைச்சலையும், மனஉளைச்சலையும், பணவிரையத்தையும் எற்படுத்த வேண்டும் என்ற சட்ட நோக்கத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் அபிடவிட் பதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவைகளாகும் என்றும், மனுதாரர் தாவா சொத்தில் அவருக்கு உரிமையுள்ளதைக் காட்டும் எந்த ஆண்ணமும் தாக்கல் செய்யாத நிலையில் இந்த மனுவை கோப்பிற்கு ஏற்ற கொண்டதே சட்ட நடைமுறைகளை தவறாகப் பயன்படுத்தும் செயல்களை மாக்குவிப்பதாக உள்ளது. பிராது வழக்கு மூலத்தில் இந்த மனுதாருக்கு எதிராக எந்த வழக்கு மூலமும் இல்லாத நிலையிலும், இந்த மனுதாருக்கு எதிராக எந்தப் பரிகாரமும் கோராத நிலையிலும், மனுதாரர் இந்த வழக்கின் அவசியமான தரப்பினரர்களே, சரியான தரப்பினராகவோ ஆக மாட்டார் இந்த மனுவை அனுமதிக்க

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2023.07.31 17:23:57 +0530

எந்த ஆட்சேபனையும் இல்லை என்று வாதிகள் தரப்பில் செய்யப்பட்டுள்ள cndorsement, வாதிகளும் இந்த மனுதாரகும் வழக்கை இழுத்தடிப்பதற்காக கள்ளக்கூட்டு சேர்ந்திருப்பதாக நான் கூறுகின்ற சங்கதியை ஊர்ஜிதப்படுத்துகிறது என்றும், அசல் வழக்கில் தாவா சொத்துக்களைப் பொறுத்து மனுதாரருக்கு ஆதரவாக 1994ம் வருடத்தில் ஏற்பட்ட கிரைய ஆவணம் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதா அல்லது வாதிகள் பிரஸ்தாபிக்கும் 1999ம் வருட கிரைய ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதா என்ற கேள்வியைத் தீமானிக்க இந்த மனுதாரர் தேனையான தரப்பினர் கிடையாது என்பதால் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

தாவாச்சொத்து உள்ளிட்ட பல சொத்துக்கள் மனுதாரர் தந்தை V.V.S.அண்ணாசாமி பாண்டியன் என்ற விஜயரகுநாத கருத்துடைய சேர்வைக்கு பூர்வீக பாத்தியமான சொத்துகள் என்றும், 1ம் பிரதிவாதியின் தாய்க்கு தனது தந்தையுடன் சட்ட விரோதமான பழக்கம் ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் மனுதாரர் தாய் ராஜமணி நாச்சியாருக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துள்ளனர் என்றும், மேற்படி சூழ்நிலையில் மனுதாரர் தகப்பனாரான அண்ணாசாமி பாண்டியன் என்பவருக்கும் மனுதாரருக்கும் உரிய சொத்துகளில் பாகம் வேண்டி மனுதாரர் மைனராக இருந்ததால் தாயார், தகப்பனரான அண்ணாசாமி பாண்டியன் உள்ளிட்டோர் மீது மதுரையிலிருந்த இராமநாதபுரம் சார்பு நீதிமன்றம் OS.No.01/1963 என்ற எண்ணில் ஜமீன் சொத்துகள் தொடர்பாக நடந்த பாக வழக்கில் 20.12.1963 ஆம் தேதியில் ஏற்பட்ட தீர்ப்பில் ஜமீன் சொத்துகளில் தனக்கும் சரி பங்கு உள்ளதாக ஏற்பட்ட தீர்ப்பினைத் தொடர்ந்து, தனது தந்தை தொடர்ந்த மேல்முறையீடும் சென்னை உயர்நீதிமன்றத்திலும் ஊர்ஜிதம் செய்யபட்டன என்றும், இந்நிலையில் ஏற்பட்ட மத்தியஸ்தர்கள் முன்னிலையில் ஏற்பட்ட சமாதானத்தில் நீதிமன்ற தீர்ப்புபடி கோர்ட்டுக்கு வெளியே சொத்துகளை

N VENKATESAN Digitally signed by N VENKATESAN
Date: 2023.07.31 17:24:02 +0530

மனோராஜியாக மனுதாரரும், அவரது தகப்பனாரும் பிரித்துக்கொள்வது என 19.07.1974 ல் முடிவு செய்யப்பட்டு அவ்வாறு சொத்துகளை வாய்மொழியாக இருவரும் பிரித்து அனுபவித்து வந்துள்ளார் என்றும், மனுதாரருக்கும், அவரது தந்தைக்கும் இடையே கடந்த 8.10.1999 ம் தேதியில் சில சொத்துக்களைப் பொறுத்து பாகப்பத்திரம் எழுதிக் கொண்டதாகவும், மனுதாரருக்கு பாத்தியப்பட்டு தனது அனுபவத்தில் உள்ள பல சொத்துகளை அபகரிக்க வேண்டும் என்றும், பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கின் 1ம் பிரதிவாதி அவரது மகனான 2 ம் பிரதிவாதி மூலம் பல மோசடி ஆவணங்களை உற்பத்தி செய்து பல வழக்குகளை தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் தனது தந்தை கடந்த 10.11.2010 ம் தேதியன்று இறந்து விட்டார் என்றும், மேற்படி தனது தந்தையின் வாரிசாக 1ம் பிரதிவாதியையும் அறிவிக்ககோரி மாவட்ட உரிமையியில் நீதிமன்றம் முதுகுளத்தூரில் தாக்கல் செய்ததில் மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதியும் வாரிசு என்று தீர்ப்பு ஏற்பட்டது என்றும், மேற்படி தீர்ப்பை எதிர்த்து நான் சார்பு நீதிமன்றம் முதுகுளத்தூரில் மேல்முறையீடு செய்ததில், மாவட்ட உரிமையியில் நீதிமன்றம் முதுகுளத்தூர் வழங்கிய தீர்ப்பபை ரத்து செய்து தீர்ப்பளித்துள்ளது என்றும், தாவாச்சொத்து உட்பட மொத்தசொத்தின் புல எண்.192 தனக்கு பாத்தியப்பட்டு, பின் பல உட்பிரிவுகளாகி பல நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றும் அது போக உட்பிரிவு புலங்களான 192/2, 192/4 க்கு எனது பெயரில் பட்டா எண் 1865 என 14.2.1992 ம் தேதி முதல் தாக்கலாகி வருகிறது என்றும், மேலும் மேற்படி சொத்து தற்போது காலியிடமாகவே இருந்து வருகிறது என்றும், மேலும் மேற்படி 192/2 பல உட்பிரிவுகளாக ஆகி தற்போது தாவாச்சொத்து புல எண் 192/14 என தாக்கலாகி வருகிறது என்றும், மேற்படி நிலையில் வாதிகள் தாவாச்சொத்து தனது தந்தையின் மூலம் கிரையம் பெற்று விட்டதாகவும், வழக்கின் பிரதிவாதிகள் வீண் வில்லங்க விபரம் செய்து வருவதால் மேற்படி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வரும் விபரத்தைக் கூறி. அதனால் குறைந்த விலைக்கு யாருக்காவது விற்று விடலாம் என்று வாதிகள் வகையறாவினர் பிரஸ்தாபித்து வந்துள்ளனர் என்றும், அதுகுறித்து நான் தனது வழக்கறிஞர் மூலம் வழக்கு விபரத்தை பார்த்த தெரிந்து கொண்டேன் என்றும் மேலும் வாதிகளும், பிரதிவாதிகளும் வஞ்சகூட்டு கொண்டு தாக்கல் செய்துள்ளதை தவிர வேறொன்றும் இல்லை என்றும், தாவாச்சொத்து உள்ளிட்ட மொத்த சொத்துகளில்

N VENKATESAN Digitally signed by N VENKATESAN
Date: 2023.07.31 17:24:07 +0530

எவ்வித உரிமையோ, அனுபவமோ இல்லாத உபய தரப்பினரும் மோசடியாக ஏற்படுத்திய ஆவணங்களைக்கொண்டு அதன் மூலம் வருவாய்துறையில் பட்டா பெற்று உண்மையை மறைத்து வழக்கை நடத்தி வரும் நிலையில் மேற்படி வழக்கில் மனுதாரரை தரப்பினராக சேர்த்து வழக்கை நடத்தினால் நீதிமன்றத்திற்கு உண்மைநிலை தெரியும் வரும் என்பதால், வழக்கில் மனுதாரரை தரப்பினராக சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் வாதத்தை முன்வைத்துள்ளார்.

எதிர்மனுதாரரின் எதிர்மனுவை பார்கையில் தாவா சொத்திற்கும், மனுதாரருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் தாவாவை இழுத்து அடிக்க வேண்டிய நோக்கத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையில்லை என்றும், இந்த மனுதாரர் தாவா சொத்தில் எந்த உரிமையும் கோர முடியாது என்றும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள அனைத்து சங்கதிகள் தவறு என்றும், மனுதாரர் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரர் தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும் என்றும், 3, 4 எதிர்மனுதாரர்களின் நியாயமான உரிமைகளை நிலைநாட்டவே இந்த மனுதாரருக்கு எதிராக வழக்குகளை நடத்தி வருவதாகவும், இந்த மனுதாரர் 3ம் எதிர்மனுதாரர் VSS அன்னாசாமி பாண்டியனின் மகள் இல்லை என்று தனது மனுவில் கூறியிருப்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், இந்த வழக்கை நடத்தாமல் இழுத்தடிப்பதன் மூலம் 3 , 4 எதிர்மனுதாரர்களுக்கு வீண் அழைச்சலையும், பண விரையத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த மனுவை அனுமதிக்க எந்த ஆட்சேபனையும் இல்லை என்று வாதிகள் தரப்பில் மேல் அழுத்தம் செய்யப்பட்டிருப்பததில் இருந்து வாதியுடன் கள்ளக்கூட்டு சேர்ந்திருப்பது ஊர்ஜிதம் ஆவதாகவும், இந்த மனுதாரர் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் இல்லை என்றும், இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய எதிர்மனுதாரரின் வாதத்தின்படி பார்கையில்,

மனுதாரர் தாவா சொத்தில் தனக்கு உரிமை உள்ளதாக கூறியுள்ள நிலையில், மனுதாரருக்கும், 3, 4 எதிர்மனுதாரர்களும் உறவினர்கள் என்று கூறியிருப்பதும், வழக்கிற்கு இந்த மனுதாரர் அவசிய தரப்பினர் என்று இந்த மனு தாக்கல் செய்துள்ள

N VENKATESAN Digitally signed by N VENKATESAN
Date: 2023.07.31 17:24:11 +0530

நிலையில், தாவா சொத்திற்கும், மனுதாரருக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது குறித்து இந்த வழக்கின் விசாரணையின் மூலம்தான் தெரிய வரும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இந்த மனுதாரரின் மனுவின் மூலம் தாவா சொத்திற்கு உரிமை உள்ளது என்றும், அவசிய தரப்பினர் என்றும் மனுதாரரின் கோரிக்கையை ஏற்காமல் மனுவை தள்ளுபடி செய்து விட்டால் மனுதாரருக்கு ஈடுசெய்ய இயலாத இழப்பு ஏற்படும் என்று மனுதாரரின் கூற்று சரியானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

இந்த மனுதாரரை தரப்பினராக சேர்ப்பதால் உண்மை என்பது இறுதி விசாரணையில் தெரிய வரும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரரை தரப்பினராக சேர்ப்பதால் 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித உரிமை இழப்பும் ஏற்படப்போவதில்லை என்று இந்நநீதிமன்றம் கருதுகிறது. மனுதாரருக்கும், வாதிகளுக்கு என்ன உறவு உள்ளது என்பதும், கள்ள உறவு இருப்பதாக 3, 4 எதிர்மனுதாரர்கள் கூறியிருப்பதும், வழக்கின் விசாரணையின் மூலம்தான் அறிய முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதின் காரணமாக 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள கால விரயம், வழக்கின் இழுத்தடிப்பு தன்மை என்பதை ஈடு செய்ய மனுதாரர் 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2000/-யை ஈடாக செலவுத்தொகை செலுத்த வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக இம்மனு நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் 3, 4 எதிர்மனுதார்களுக்கு ரூ.2000/-யை செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் மனு தானாக தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

மீண்டும் அழைக்க 04.08.2023.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 31.07.2023 இன்று அவையறிய பகரப்பட்டது.

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2023.07.31 17:24:15 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>: இல்லை

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>: இல்லை

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2023.07.31 17:24:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் நீதிமன்றம், கடலாடி.
சீரான/வரைவு உத்தரவு
IA.No.118/2021
in
OS.No.42/2019
நாள். 31.07.2023